1983 பிப்ரவரி 14]

திரு. வேடசந்தூர் வி. பி.பாலசுப்பிரமணியன்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த தக்காவிக் கடன் என்று கிணற்றை ஆழப் படுத்துவதற்காக அரசு கடன் கொடுக்கிறபோதும், மற்ற நிலவள வங்கிகள் மூலமாக கடன் கொடுக்கிறபோதும், 300 மீட்டர்க்கு இடையில் இருந்தால் அந்தக் கடன் இல்லை என்று அதிகாரிகள் சொல்கிறார்கள். அந்த விதியை மாற்றாததால் பக்கத்திலே இருக்கின்ற வசதியானவர்கள் கிணற்றை வெட்டுகிறார்கள். அரசு கடனை எதிர்பார்க்கின்றார்கள் இந்த விதியின் காரணமாக தங்கள் கிணற்றை ஆழப்படுத்த முடியவில்லை. எனவே வறட்சியை கருத்தில் கொண்டு அரசு இந்த விதியை தளர்த்தி நடவடிக்கை எடுக்க முன்வருமா என அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, சாதாரண காலங்களில் கடன் பெறும்போதுதான் அதற்கு முன்னாலே அவர்கள் நிலவள வங்கியிலே கடன் வாங்கியிருந்தால் அந்தக் கடனைப் பெற்று, அந்தக் கடனைச் செலுத்தாதவர்களுக்கு கடன் கொடுப்பது மறுக்கப்படுகிறது. வறட்சி நிவாரணக் காலத்தில் தக்காவிக் கடனாக இருந்தாலும் சரி, நிலவள வங்கிக் கடனாக இருந்தாலும் சரி, விதியை தளர்த்திக் கொடுக்கப்படுகிறது. இப்போது கூட வறட்சியாலே, நிலவள வங்கிகளில் குறிப்பாக இந்த விதியை தளர்த்தி 1½ கோடி ரூபாய் கொடுத்திருக்கிறார்கள்.

தேனிவால்கரடு பகுதியில் ஆதிதிராவிட மக்களுக்கு ஒதுக்கப்பட்ட இடம்

*வினா எண். 266—திரு. வே. இரா. ஜெயராமன்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேனிவால்கரடு பகுதியில் அரிசனங்களுக்கு ஒதுக்கப் பட்ட இடத்தில் மற்றவர்கள் ஆக்கிரமிப்பு செய்துள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் ; பேரவைத் தலைவர் அவர்களே, பட்டா பெறுவதற்குத் தகுதியற்ற அனைத்து ஆக்கிரமிப்புதார்களையும் காலி செய்யுமாறு, தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. வீடற்ற தகுதி பெற்ற ஆதி திராவிடர் களுக்கு மட்டும் நிலப்பட்டா கொடுக்கப்படும்.

திரு. என். பழனிவேல் : பேரவைத் தலைவர் அவர்களே, தேனி பகுதியில் அரிஜனங்களுக்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் மற்ற வர்கள் ஆக்கிரமிப்பு செய்து இருக்கிறார்களா என்பது கேள்வி. அமைச்சர் அவர்கள் புறம்போக்கு நிலங்கள் அத்தனையும்

அகற்றுவதற்காக உத்திரவு இட்டு இருப்பதாகவும், அரிஜனங்ளுக்கு மட்டும் பட்டா கொடுப்பதாகவும் சொல்கிறார்கள். இங்கே இருக்கிற கேள்வி அரிஜனங்களுக்கு ஒதுக்கப்பட்ட இடம் சம்பந்தப்பட்டது. ஆகவே அதற்கு அமைச்சர் அவர்கள் பதில் அளிப்பார்களா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, மன்னிக்கவேண்டும், அரிசனங்கள் என்று சொல்லாமல் இனிமேல் 'ஆதித்திராவிடர்கள்' என்று சொல்லவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தேனி பகுதியில் அல்லி நகரத்தில் 203 பேர் ஆக்கிரமிப்பு செய்து இருக்கிறார்கள். 203 பேர்களில் ஒரே ஒருவர் தான் மருத்துவர் வகுப்பைச் சேர்ந்தவர். மற்ற அத்தனைபேரும் ஆதிதிராவிடர்கள். (குறுக்கீடு) ஆதிதிராவிடர்களில் பல இனத்தவர் இருக்கின்றனர். அவர்களில் யாருக்கு இதற்கு முன்னாலே வீடு இருக்கிறதோ, அல்லது இதற்கு முன்னாலே நிலம் இருக்கிறதோ அவர்களைத் தவிர மற்றவர்களுக்கு நிலம் கொடுக்கப்பட்டு, பட்டா செய்யப்படும். முதலிலேயே நிலம் வைத்துக்கொண்டு, ஆக்கிரமிப்பு செய்து கொண்டு, தகுதியுள்ள இன்னொரு ஆதிதிராவிடருக்கு கிடைப்பதைத் தடுக்கவோ அல்லது அவர்களே அந்த வீட்டுமனையையும் கூடுதலாக வைத்துக்கொள்ளவோ நினைக்கின்றவர்களை மட்டும் அந்த ஆக்கிரமிப்புகளில் இருந்து நீக்கிவிட்டு, மற்றவர்களுக்கு அது பட்டா செய்து கொடுக்கப்படும்.

திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அரிசனங்கள் என்று சொல்லக்கூடாது. ஆதிதிராவிடர்கள் என்று சொல்ல வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள். இங்கே அச்சடிக்கப்பட்டு கொடுக்கப்பட்டுள்ளதிலேயே 'அரிசனங்கள்' என்று தான் அச்சிடப்பட்டு கொடுக்கப்பட்டிருக்கிறது. நான் அறிந்து கொள்ள விரும்புவது, அரிசனங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிலம் என்று சொன்னால், அந்த இடத்தில் அவர்களைத் தவிர இன்னொருவருக்கு மற்றவர்கள் எப்படி பட்டா கொடுக்கமுடியும் அந்த இடத்தில். மற்றவர்கள் எப்படி ஆக்கிரமித்தார்கள்? உரிமை பெற்றவர்கள் தானே அந்த இடத்தில் இருக்கமுடியும்? மற்றவர்கள் அதிலே எப்படி உள்ளே நுழைந்தார்கள் என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, எங்கே தவறு நடந்து விட்டாலும், அந்தத் தவறு இனிமேல் நிகழாமல் இருக்கவேண்டும் என்பதற்குத்தான் நாம் நடவடிக்கைகள் எடுக்கமுடியுமே தவிர நடந்ததையே மாற்றி மாற்றிச் சொல்லிக்கொண்டு இருப்பதில் பயன் இல்லை. இப்போது நான் 'ஆதிதிராவிடர்கள்' என்று மாற்றிச்சொல்லவேண்டும் என்று திரும்பத் திரும்ப சொல்லிவந்ததால், மாண்புமிகு உறுப்பினர்களும் மாற்றிச் சொல்லி வருகிறார்கள். அதற்காக என்னுடைய மகிழ்ச்சி. அதேபோல அதிகாரிகளிடத்திலும் சொல்லியிருக்கிறேன். அவர்களும் கொஞ்சம் கொஞ்சமாக

இதிலே மாற்றம் செய்து கொண்டு வருகிறார்கள். அங்கேயிருந்து பதில் எழுதி அனுப்புகின்ற நேரத்திலும் ஆதிதிராவிடர்கள் என்று திருத்தி எழுதி அனுப்பவேண்டும் என்று சொல்லி, அவர்களும் அவ்விதம் செய்து வருகிறார்கள்.

இந்தக் கேள்வியைப் பொறுத்தவரையில் அந்தக் குறிப்பிட்ட இடத்தில் உள்ள நிலம் காடு புறம்போக்கு என்ற அளவில் காலம் காலமாக இருந்தது. அந்தக் காட்டுப் புறம்போக்கை ரெவின்யு துறை எடுத்துக்கொள்வது என்று எடுத்துக்கொண்ட பிறகு அதிலே மற்றவர்கள் ஆக்கிரமிப்பு செய்தார்கள். ஆக்கிரமிப்பு செய்த 203 பேரும்—ஒருவரைத் தவிர—அவர் யகுத்துவர் வகுப்பைச் சேர்ந்தவர்—ஆதிதிராவிடர் வகுப்பைச் சேர்ந்தவர்கள். ஆதிதிராவிட வகுப்பைச் சேர்ந்த பல இனத்தவர் அதிலே இருக்கின்றனர். பெயரைச் சொல்ல வேண்டுமானாலும் சொல்கிறேன். (குறுக்கீடு) அது யாருக்கும் ஏற்கனவே ஒதுக்கப்பட்ட நிலம் அல்ல. அங்கே ஆக்கிரமிப்பு செய்தவர்களுக்கு அதை ஒதுக்க இருக்கிறோம். அதை ஆதிதிராவிடர்களுக்கு ஒதுக்க முடிவு செய்துள்ளதால், அங்கேயுள்ள அத்தனைபேரும்—ஒருவரைத் தவிர—ஆதிதிராவிடர்களாக இருப்பதால், அவர்களுக்கு அந்த இடம் நான் ஏற்கனவே குறிப்பிட்ட அடிப்படையில் ஒப்படை செய்யப்படும்.

புயல் பாதுகாப்பு இல்லங்கள்

*வினா எண் 267—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

புயல் பாதுகாப்பு இல்லங்களில் இயற்கை சீற்றம் இல்லாத காலங்களில் பொது மக்களுக்கு கல்வி, தையல் ஆகியவைகள் கற்றுத் தரப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, இயற்கை சீற்றம் இல்லாத காலங்களில் புயல் பாதுகாப்பு இல்லங்கள், பள்ளிக் கட்டிடங்கள் இல்லாத இடங்களில் பள்ளிக்கூடங்கள் நடத்துவதற்கும், முதியோர் கல்வி போதிப்பதற்கும், குடும்ப நலக் கூட்டங்கள், கல்யாணங்கள் நடத்துதல் போன்ற சமுதாய நிகழ்ச்சிகளுக்கு இந்தக் கட்டிடங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

தமிழாக்கம் செய்யப்பட்டுள்ள மைய அரசின் சட்டங்கள்

வினா எண். 268—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—